பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
01 04 2025 **TUESDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி, இன்று சிலி நாட்டு அதிபர் திரு. **Gabriel Boric Font** –டுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

2. இந்தியா – நெதர்லாந்து இடையேயான வர்த்தகம், முதலீடு மற்றும் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. மத்தியப்பிரதேசத்தில் 19 புனித நகரங்களில் மதுவிலக்கு இன்று முதல் அமல்படுத்தப்படுவதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது..

4. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மர் நாட்டிடம் இந்தியாவின் சார்பில் 50 டன் நிவாரணப் பொருட்களை அந்நாட்டிற்கான இந்திய தூதர் திரு. **Abhay Thakur** ஒப்படைத்துள்ளார்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் லக்னோ – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

**<<<<<>>>>>**

பிரதமர் திரு. நரேந்திரமோடி, இன்று சிலி நாட்டு அதிபர் திரு. **Gabriel Boric Font** –டுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

ஐந்து நாள் பயணமாக இன்று புதுதில்லி வரும் சிலி அதிபருடன் அந்நாட்டின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வர்த்தக பிரதிநிதிகளும் வருகின்றனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்முவையும் அவர் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்..

பின்னர், மும்பை மற்றும் பெங்களூருவில் அரசியல் தலைவர்கள், இந்திய வர்த்தக பிரதிநிதிகள், ஸ்டார்ட் அப் நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களையும் திரு. **Gabriel Boric Font** சந்தித்து உரையாடவுள்ளார்.

இந்தியா, கடந்த ஆண்டு 2 புள்ளி ஆறு பில்லியன் டாலர் மதிப்பில் இந்திய பொருட்களை சிலி நாட்டிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.

மேலும் 620 மில்லியன் டாலர் அளவிற்கு அந்நாட்டில் இந்தியா முதலீடு செய்துள்ளது.

பொறியியல், மருத்துவம், வாகனங்கள், ரசாயனம், ஜவுளி ஆகிய துறைகளில் அதிக அளவிலான உற்பத்தி பொருட்களை இந்தியா சிலி நாட்டிற்கு ஏற்றுமதி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

**<<<<<>>>>>**

பிம்ஸ்டெக் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் 6வது உச்சிமாநாடு வரும் 4ஆம் தேதி தாய்லாந்து தலைநகர், பாங்காக்கில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளைமறுநாள் தாய்லாந்து செல்கிறார்.

பிம்ஸ்டெக் நாடுகளின் ஒத்துழைப்போடு, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் எழுந்துள்ள சவால்களை எதிர்கொள்ளும் விதத்தில் இம்மாநாட்டில் விவாதங்கள் நடைபெறவுள்ளது.

பிம்ஸ்டெக் நாடுகளின் முன்னேற்றம், வளர்ச்சி ஆகியவற்றின இலக்குகளை நிர்ணயிக்கும் வகையிலும் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

பிம்ஸ்டெக் அமைப்பில் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியான்மர், நேபாளம், இலஙகை மற்றும் தாய்லாந்து ஆகிய ஏழு நாடுகள் இடம்பெற்றுள்ளன.

**<<<<<>>>>>**

இந்தியா – நெதர்லாந்து இடையேயான வர்த்தகம், முதலீடு மற்றும் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லி வந்துள்ள நெதர்லாந்து நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு. **Caspar Veldkamp –** உடன் அவர் பேச்சுவார்த்தைநடதினார்.

இருநாடுகளுக்கு இடையேயான புத்தாக்கம், வேளாண்மை, மருத்துவம், பாதுகாப்பு போன்றவற்றில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் இருவரும் விவாதித்தனர்.

செமி கண்டக்டர், பசுமை ஹைட்ரஜன், கல்வி மற்றும் திறன் மேம்பாடு ஆகிய துறைகளில் புதிய வாய்ப்புகளை கண்டறிவது குறித்து அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

நெதர்லாந்து நாட்டின் வெளியுறவு அமைச்சர் இந்தியாவிற்கு வந்துள்ளது, இருநாடுகளுக்கு இடையேயான பல்வேறு துறைகளின் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், தமது சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<>>>>>**

உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு மாநாடு, மும்பையில் மே மாதம் 1ஆம் தேதி நடைபெறவுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இந்த மாநாடு ஜியோ உலக மாநாட்டு மைய கூடத்தில் நடைபெறுகிறது.

இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் பங்கேற்கவுள்ளனர்.

இந்த துறையில் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதுமைகளை வெளிப்படுத்தும் விதத்திலான பல்வேறு ஒலி ஒளி நிகழ்ச்சிகளும் இம்மாநாட்டில் இடம்பெறவுள்ளன.

**<<<<<>>>>>**

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மர் நாட்டிடம் இந்தியாவின் சார்பில் 50 டன் நிவாரணப் பொருட்களை அந்நாட்டிற்கான இந்திய தூதர் திரு. **Abhay Thakur** ஒப்படைத்தார்.

இந்தியாவிலிருந்து ஐந்து விமானப்படை விமானங்கள் மூலமாகவும், இந்திய கடற்படையின் 5 கப்பல்கள் மூலமாகவும் நிவாரணப்பொருட்கள் கொண்டு செல்லப்பட்டதாக அவர் தமது சமூகவலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

இதற்கிடையே, மியான்மர் நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை இரண்டாயிரத்தை தாண்டியுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**<<<<<>>>>>**

மத்தியப்பிரதேசத்தில் 19 புனித நகரங்களில் மதுவிலக்கு இன்று முதல் அமல்படுத்தப்படுவதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

இதன்படி உஜ்ஜைனி, ஓம்கரேஸ்வர், மகேஷ்வர், மைக்கர், சித்தகூட், டாட்டியா உள்ளிட்ட நகரம் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் இந்த நடைமுறை செயல்படுத்தப்படும் என்று அம்மாநில அரசு ஏற்கனவே அறிக்கை வெளியிட்டிருந்தது.

அதன்படி இந்த இடங்களில் இன்று முதல் மதுவிற்பனை நிறுத்தப்பட்டு, கடைகளை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் மாநில அரசு ஈடுபட்டுள்ளது.

**<<<<<>>>>>**

காமன்வெல்த் அமைப்பின் 7வது பொதுச்செயலாளராக **Shirley Botchwey** இன்று பதவியேற்கிறார்.

ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறையாகும்.

சர்வதேச உறவுகள், நல்லாட்சியை ஏற்படுத்துவது, சமூக சேவைகளை மேம்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் கடந்த 20 ஆண்டுகளாக தலைமைப்பொறுப்பில் இருந்து அவர் செயல்பட்டுள்ளார்.

கானா நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சராகவும் அவர் பதவி வகித்துள்ளார்.

காமன்வெல்த் அமைப்பின் செயல்பாடுகளை ஊக்கப்படுத்தி, பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**<<<<<>>>>>**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது அகில இந்திய மாநாடு, மதுரையில் இன்று தொடங்குகிறது.

தமுக்கம் மைதானத்தில் நடைபெறும் இம்மாநாடு வரும் 6ஆம் தேதி நிறைவடைகிறது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக நாடுமுழுவதிலுமிருந்து அக்கட்சியினர் மதுரைக்கு வந்துள்ளனர்.

மாநாட்டை ஒட்டி, கண்காட்சி மற்றும் சிறப்பு உரை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

பாஸ்போர்ட் தொடர்பான சந்தேகங்களை களையும் வகையில் சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலர் திரு விஜயகுமாருடன், எமது செய்திப்பிரிவு உதவி இயக்குனர் ஜாய் பங்கேற்ற நேர்முகம், இன்று காலை மணி 8.45-க்கு ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகும்.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>

62வது தேசிய கடல்சார் தின கொண்டாட்டங்களை மஹாராஷ்ட்ர மாநில ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் மும்பையில் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் கடல்சார் பொருளாதாரம் முக்கியப் பங்கு வகிப்பதாக கூறினார்.

துறைமுகங்கள் நவீனப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

சரக்கு கப்பல் போக்குவரத்துத்துறை, ரயில்வே மற்றும் வர்த்தக அமைப்பினருக்கு இடையே ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார்.

<<<<<>>>>>

இந்திய அமெரிக்க முப்படைகளின் பயிற்சியான **Tiger Triumph** பயிற்சி இன்று கிழக்கு கடற்கரைப்பகுதியில் தொடங்கவுள்ளது.

விசாகபட்டினத்தில் நடைபெறும் இந்த பயிற்சி 13ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இந்திய தரப்பில் ஜலாஷ்வா, கரியால், மும்பை, சக்தி ஆகிய இந்திய கடற்படை கப்பல்கள், ஹெலிகாப்டர்கள், ரோந்து விமானங்கள் இதில் பங்கேற்கின்றன.

அமெரிக்க கடற்படை கப்பல்களான காம்ஸ்டாக், ரால்ப் ஜான்சன் ஆகியவையும் இப்பயிற்சியில் கலந்து கொள்ளவுள்ளன.

பயிற்சியின் இறுதி நாளில் இந்திய – அமெரிக்க மருத்துவ குழுக்களின் மருத்துவ முகாமும் நடைபெறவுள்ளது.

**<<<<<>>>>>**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் லக்னோ – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு மணி 7 .30 க்கு தொடங்குகிறது.

மும்பையில் நேற்று நடைபெற்ற போட்டியில், மும்பை அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

முதலில் விளையாடிய கொல்கத்தா அணி 16 புள்ளி இரண்டு ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 116 ரன் எடுத்தது.

117 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய மும்பை அணி 12 புள்ளி ஐந்து ஓவரில் இரண்டு விக்கெட் இழப்பிற்கு 121 ரன் எடுத்து வெற்றி பெற்றது

**Ryan Rickelton** அதிகபட்சமாக 62 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**<<<<<>>>>>**

தென்கொரியாவில் நடைபெறும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மனிக்கா பத்ரா இன்று சீனாவின் **Tianya Qian** –ஐ எதிர்கொள்கிறது.

**<<<<<>>>>>**

மொனாக்கோ ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை இன்று இத்தாலி இணையை எதிர்கொள்கிறது.

**<<<<<END>>>>>**